## காற்றில் கலந்த முதல்வர் விஜய்யின் தேர்தல் வாக்குறுதிகள்!

# ஏமாற்றிய த.வெ.க.பட்ஜெட் - அதிருப்தியில் தமிழக மக்கள்!

சென்னை, ஆக. 10 -

மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருவேன். கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்றுவேன்.யாரையும் ஏமாற்ற மாட்டேன். 100 சதவீதம் நம்பிக்கையாக இருங்க என்று தமிழக முதல்வராக த.வெ.க. தலைவர் விஜய் பொறுப்பேற்ற போது பேசியது. விவரம் அறியாதவர்களை புல்லரிக்க வைத்தது. ஏனென்றால் சட்டமன்றத் தேர்தல் களத்தில் வாக்குறுதிக்காக அவர் அள்ளிவீசிய வாக்குறுதிகளின் ஈர்ப்பு அப்படி.

“அனைத்து குடும்பத்தலைவி களுக்கும் மாதம் தோறும் மகளிர் உரிமைத் தொகையாக ரூ.2500 வழங் கப்படும். விவசாயிகளின் பயிர்க்கடன் அனைத்தும் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். வீட்டிற்கு ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள் வழங்கப்ப டும். தொலைதூர பேருந்துகளிலும் பெண்கள் கட்டணமில்லாத பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படும். வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.4 ஆயிரம் வழங்கப்படும். உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.20 லட்சம் வரை, கல்விக்கடன் வழங்கப்படும்” என்பது போன்ற வாக் குறுதிகள் சிட்டிகளில் மட்டுமல்ல,

பட்டிதொட்டியெல்லாம் பரவலானது. உச்சநடிகரான எங்கள் அண் ணன் பலகோடி ரூபாய் வருமானத்தை விட்டுவிட்டு, மக்களுக்கு நன்மை செய்வதற்கு அரசியலுக்கு வருகிறார். அவருக்கு பணத்தின் மீது எந்த ஈர்ப்பும் கிடையாது. நீங் கள் எல்லாம் ஓட்டு போட்டு அவரை முதல்வராக தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு அடுத்த நொடியே இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறும். சொன்னதை செய்வதற்கு அவரால் மட்டுமே முடியும். இதற்கான அனைத்து திறமைகளும் அவர் ஒருவருக்கே உள்ளது என்று வீடு தோறும் அள்ளிவிட்டனர் அவரது அடிப்பொடிகள்.

இதை நம்பி கோடிக்கணக்கான மக்கள் வாக்களித்தனர். தனிப்பெ ரும்பான்மை கிடைக்காத நிலையிலும், திமுக கூட்டணியின் தயவால் வெற்றிபெற்ற கட்சிகளை இணைத்து மெஜாரிட்டியை நிரூபித்து முதல்வர் பொறுப்பேற்றார் விஜய், அப்பாடா, ஒருவழியாக முதல்வர் பதவியில் அமர்ந்து விட்டார். அவரது முதல் நோக்கமேதேர்தல்வாக்குறுதிகளைநிறைவேற்றுவதற்கான கோப்புகளில் கையெழுத்து போடுவது தான் என்று 100 சதவீதம் நம்பினர் தமிழகத்து மக்கள். ஆனால் அப்படியே ஜகா வாங்கிய முதல்வர், முந்தைய அரசு கஜானாவை காலி செய்துவிட்டது. அதை சீரமைப்பதற்கு காலஅவகா சம் தேவை என்ற பழைய பல்லவியை பாடி முடித்தார். மேலும் இதுதொடர்பாக ஒப்புக்கு சப்பான வெள்ளை அறிக்கையையும் நிதி அமைச்சர் மரியவில்சன் வெளியிட்டார். இதுகுறித்து பேசிய முதல்வர், மக்கள் நிதிநிலையை அறிந்து கொள்ளவே இந்த வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இதையெல்லாம் சீரமைத்து அனைத்து வாக்குறுதிகளையும் நிறை வேற்றுவேன் என்று உருகினார்.

நம்ம முதல்வர் திறமை யான ஆளுதான். எனவே இதை எல்லாம் உடனடியாக சரியாக்கி விடுவார். சட்டமன்ற கூட்டத்தொடரில் தொடர்ந்து தேர்தல் வாக்குறுதிகளை நிறை வேற்றுவதற்கான அறிவிப்புகள் வரும் என்று மேலும் நம்பினர் மக்கள். ஆனால் மக்கள் ஏகத்துக் கும் எதிர்பார்த்த எந்த அறிவிப்பும் முதல்வரிட மிருந்து வரவில்லை. மாறாக சர்ச்சைகளும், விமர்சனங்களும் மட்டுமே அதிகமாக இருந்தது.

நிதிநிலை வெள்ளை அறிக்கையால் மகளிர் உரிமைத்தொகை அம்போ என்ற நிலையே உருவானது. தி.மு.க .தலைவரும், எம்.எல்.ஏ.க்களும் கொடுத்த அழுத்தம் காரணமாக முன்பு வழங்கப்பட்ட ரூ.1000 உரி மைத்தொகை, மகளிர் வங்கிக்கணக் கில் வந்து சேர்ந்தது. விவசாய கடன் முழுமையாக ரத்து தொடர்


ஏமாற்றிய தவெக பட்ஜெட் அதிருப்தியில் தமிழக மக்கள்
காற்றில் கலந்த முதல்வர் விஜய்யின் தேர்தல் வாக்குறுதிகள்

பான போராட்டங்கள் தொடர்கதையாக தொடர்ந்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் த.வெ.க. அரசு, சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும் முதல் பட்ஜெட்டானது முதல்வர் விஜய்யின் வாக்குறுதிகளுக்கு வடி வம் தரும் என்று பொதுமக்களும், வேளாண்பெருமக்களும் பெரும் எதிர் பார்ப்புடன் காத்திருந்தனர். ஆனால் பலத்த ஏமாற்றமே மிஞ்சியது. தேர் தல் வாக்குறுதிகள் தொடர்பாகவோ, புதிய வளர்ச்சி திட்டங்கள் சார்ந்தோ பயனுள்ள எந்த அறிவிப்பும் பட் ஜெட்டில் இடம் பெறவில்லை. கடந்த திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் பெயர்களை மட்டும் மாற்றி, புதிய அறிவிப்பாக வெளியிட்டுள்ளனர். ஆனால், அதிலும் நிதியை குறைத்து அறிவித்திருப்பது அதிருப்தியின் உச்சமாக மாறி யுள்ளது என்பதே உண்மை. அதிலும் தி.மு.க .அரசு கொண்டு வந்த திட்டங்களின் பெயர்களுக்கு முன்பு ‘வெற்றி’ என்ற பெயர் மட்டுமே அதிகபட்சமாக சேர்க்கப்பட்டுள்ளது. இப்படி வலுக் கட்டாயமாக சேர்க்கப்பட்ட ‘வெற்றி’ என்பது த.வெ.க. அரசுக்கு நிர்வாகத் திறமையில் ஏற்பட்டுள்ள ‘தோல்வி’ என்பதற்கு சான்றாகிறது என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

### விவசாயிகள் குமுறல்!

“தமிழக முதல்வர் விஜய், தனது தேர்தல் பிரசாரத்தின்போது நெல் குவிண்டாலுக்கு ரூ.3,500, கரும்பு டன்னுக்கு ரூ.4,500 விலை தருவேன். பாலுக்கான கொள்முதல் விலையை உயர்த்தி தருவேன். 20 லட்சம் புதிய வேளாண் மின்இணைப்புகள் தரப்படும். அனைத்து நியாயவிலை அங்காடிகளிலும் பாமாயி லுக்கு மாற்றாக சமையலுக்கு தேங்காய் எண்ணெய் தருவேன் என்பது உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந் தார். ஆனால் அவரது அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண்பட்ஜெட் டில் இது குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. இவை அனைத்திற்கும் மேலாக வேளாண் கடன் தள்ளுபடி திட் டத்தில் தமிழ்நாடு அரசு, இதுவரை தெளிவான அறிவிப்பை வெளியிடவில்லை. தொடர்ந்து குழப்ப நிலையிலேயே உள் ளது,” என்பது விவசாயிகளின் குமுறல்.

### காலாண்டு வரி குறைப்பில்லை!

லாரிகளுக்கான காலாண்டு வரியை குறைக்க வேண்டும் என்று பல ஆண் டுகளாக வலியுறுத்தி வருகிறோம். புதியதாக பொறுப்பேற்றுள்ள அரசு அந்த வரியை குறைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் பட்ஜெட்டில் காலாண்டு வரி குறைப்பது குறித்த எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இந்தியாவில் தமிழகம், லாரிகளின் தாயகமாக உள்ளது. ஆனால் லாரி உரிமையாளர்களுக்கு எவ்வித சலுகையோ, திட்டங்களோ பட்ஜெட்டில் இல்லை. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் காலிபணியிடம் அதிகளவில் உள்ளது. இதனால், எப்சி, லைசென்ஸ், வாகனம் பதிவு செய்தல் உள்பட பல்வேறு பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த பணியிடங்களை நிரப்புவற்கான அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை என்பது லாரி உரிமையாளர்களின் ஆதங்கம்.

### ஒரு சிறிய உதாரணம்!

“ஒரு அரசாங்கம் எந்த அளவுக்கு கல் விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் கள் என்பதை வைத்து அந்த அரசின் தரத்தையும், கொள்கையையும் முடிவு செய்யலாம், திமுக ஆட்சியில் கடந்த 20252026ம் நிதியாண்டில், பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.46,767 கோடியும், உயர்கல்விக்கு ரூ.8.494 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் கடந்த நிதியாண்டோடு ஒப்பிட்டால், நடப் பாண்டில் பள்ளிக்கல்விக்கு ரூ.2,244 கோடியும், உயர்கல்விக்கு ரூ.101

கோடியும் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாக சுமார் ரூ.2,350 கோடி வரை நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளது. இந்த ஒரேயொரு நிதி ஒதுக்கீட்டு அளவுகோலின் மூலம், கல்வித்த ரத்தை இவர்கள் குறைத்ததை தெரிந்துகொள்ளலாம். அதனால் தான் பள்ளிகளில் த.வெ.க . கட்சியின் பெயரை மாணவர்களை முழக்கமிட வைத்து, பிஞ்சுகளின் நெஞ்சில் நஞ்சை விதைக்கிறார்கள்” என்பது கல்வியாளர்கள் வைத்துள்ள குட்டு.

### திட்டங்களுக்கு 75% நிதிகுறைப்பு

“தமிழக அரசின் வேளாண்பட்ஜெட்டில், அரசு ரூ.1.50 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யும் என எதிர்பார்த்தோம். ஆனால், வெறும் ரூ.15 ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து திட்டங்களிலும் சுமார் 75 சதவீதம் நிதி குறைக்கப்ப ட்டுள்ளது. ஏன் இவ்வளவு நிதி குறைப்பு என்பது தெரியவில்லை. இந்த குறைவான நிதி விவசாயிகளை சென்ற டையுமா? என்கிற சந்தேகம் ஏற்பட்டுள் ளது. கடன் தள்ளுபடி பற்றிய அறிவிப்பு இல்லாதது பெருத்த ஏமாற்றம் அளிக்கி றது. மற்றவை அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் வரும் வழக்கமான அறிவிப்பு தான். பால் விலை உயர்வு இல்லை. மா விவசாயிகளுக்கு கொடுத்தது போதுமான தாக இல்லை. நெல்லுக்கான விலையும் போதுமானதாக இல்லை. ஒட்டு மொத் தத்தில் இது ஒரு ஜிகினா பட்ஜெட்” என் கின்றனர் மூத்த விவசாயிகள்.

### தி.மு.க. - .அ.தி..முகவின். திட்டங்களில் ஸ்டிக்கர்!

கடந்த திமுக ஆட்சியில் கொண்டு வரப் பட்ட முதல்வரின் காலை உணவுத்திட்டம் காமராஜர் காலை உணவு திட்டம் என்று மாற்றப்பட்டுள்ளது. நன்னிலம் மகளிர் நில உடமைத்திட்டம் மண்ணின் மகள் திட்டம் என்று மாற்றப்பட்டுள்ளது. தொல்குடி திட் டம் ‘ஆன்றோர் மேம்பாட்டுத்திட்டம்’ என்று மாற்றப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஆடுமாடு, கோழி வளர்ப்பு திட்டம் ‘வெற்றி மகளிர் ஆடுவ ளர்ப்பு திட்டம்’ என்று மாற்றம் கண்டுள் ளது. கறவை மாடுகள் வழங்கும் திட்டம், இலவச மடிக்கணினி வழங்கும், வீடு வழங்கும் திட்டத்தில் கூடுதலாக வெற்றி என்ற சொல் இணைக்கப்பட்டுள்ளது. தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் ‘அண் ணன் சீர் என்று உருமாறியுள்ளது. இந்த வகையில் தி.மு.க, அதிமுக கொண்டு வந்த 150 திட்டங்களின் மீது த.வெ.க. ஸ்டிக்கர் ஒட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### பெயர் மறைப்பு நிதியோ குறைப்பு!

ஆகிதிராவிடர் விவசாய குடும்பங்களுக்கு வேளாண்மை கருவிகள் வாங்க மானியம் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டத்தை தற்போது அண்ணல் அம்பேத்கர் வேளாண்மை மானிய திட்டம் என்று பெயர் அறிவித்துள்ளனர். உணவு தானிய உற்பத்தி இலக்கு 124 மெட்ரிக் டன் என்று த.வெ.க. அரசு அறிவித்துள்ளது. ஆனால் தி.மு.க .ஆட்சியில் இதன் இலக்கு 130 லட்சம் மெட்ரிக் டன் என்று அறிவித்து, அதற்கான செயல்பாட்டு பணிகள் அனைத்தும் ஏற்கனவே துவக்கப்பட்டுள்ளது. விவசா யிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவ தற்காக ரூ.8,180 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் தற்போது இதற்கு ரூ.7,432 கோடி நிதியை த.வெ.க. அரசு ஒதுக்கி யுள்ளது. இப்படி பெயர் மறைத்து நிதி குறைப்பு செய்யப்பட்ட திட்டங்கள் ஏராளம் என்கின்றனர் மக்கள் பிரதிநிதிகள்.

### சிறு, குறு தொழில்கள் மேம்பட வழியில்லை!

“தமிழக பட்ஜெட்டில் மின்வாரியத்தில் நிலைக்கட்டணமாக ஒருகிலோவாட் டிற்கு ரூ.590ஐ குறைக்காதது ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த 3 மாதமாக மின் பற்றாக்குறை இருந்து வரும் நிலையில், மின் உற்பத்தியை அதிகரிக்க எந்த திட்ட மும் இல்லை. மாநிலத்தில் 130 சிட்கோ தொழிற்பேட்டைகள் உள்ள நிலையில், கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளை மட்டும் பராமரிக்கப்போவதாக அறிவிப்பு வந்துள்ளது. தமிழகத்தில் உள்ள 4,500 குறுந்தொழிற்சாலைகளுக்கு சுலபமாக கடன் வழங்க எந்தவித அறிவிப்பும் இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான எம் .எஸ்.எம் .தொழில் நிறுவனங்கள் மூடிக்கி டக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். அதுபோன்ற தொழிற்சாலைகளை மீண் டும் இயக்குவதற்கான அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனோம் என்பது சிறு, குறு தொழில் கூட்டமைப்பு கள் வெளிப்படுத்தும் வேதனை.

### கடன் அதிகரிப்பில் பல்வேறு சந்தேகம்!

பள்ளிக்கல்வித்துறைக்கு கடந்த (202526) பட்ஜெட்டில் ரூ.48,534 கோடி ஒதுக் கப்பட்டது. தற்போது (202627) ரூ.44,527 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்கல்வித் துறைக்கு 202526ல் ரூ.8,505 கோடி ஒதுக்கப்பட்டது. தற்போது (202627) ரூ.8,393 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்வ ளத்துறைத்துறைக்கு கடந்த பட்ஜெட்டில் (202526) ரூ.10,706 கோடி ஒதுக் கப்பட் டது. தற்போது (202627) ரூ.9,264கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எரிசக்தி துறைக்கு கடந்த 2025 26ல் ரூ.18,091 கோடி ஒதுக் கப்பட்டது. தற்போது (202627) ரூ.15,828 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறி துணிநூல் துறைக்கு 202526ல் ரூ.1,943 கோடி ஒதுக்கப்பட்டது. தற்போது (202627) ரூ.1,678 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி முக்கியமான துறைகளுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீட்டை த.வெ.க அரசு குறைத்துள்ளது. அதேநேரத்தில் தமிழகத் தன் கடன் மட்டும் ரூ.1.22 லட்சம் கோடி யில் இருந்து ரூ.1.73 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது என்று கணக்கு காட்டுவது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

நன்றி :
‘தினகரன்’
9.8.2026





எழும்பூர் வடக்குப் பகுதி 77(அ) வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். ஏழை எளிய மக்களுக்கு பிரிஞ்சி சாதம் மற்றும் வாட்டர் பாட்டிலை 77(அ) வட்டச் செயலாளர் வி அபாய் தலைமையில் பகுதிச் செயலாளர் சொ.வேலு பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் பங்கேற்றனர்.

**பருவமழை பெய்யாததால்**

## வறண்டு கிடக்கும் பெரியகுளம் கண்மாய்!

### நிலத்தடி நீர்மட்டம் பாதிப்பு!

சிவகாசி.ஆக.10-

சிவகாசி பகுதியில் வடகிழக்கு பருவமழை சரிவர பெய்யாததால் பெரியகுளம் கண்மாய் வறண்டது. இதனால் நகரில் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சிவகாசி பெரியகுளம் கண்மாய் கடந்த பல ஆண்டுகளாக நீர்வரத்து இல்லாமல் வறண்டு கிடந்தது. இந்நிலையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கனமழையால் நிரம்பியது. சிவகாசி நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சிவகாசி மாநகராட்சி பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்தது. பெரியகுளம் கண்மாய் நீர்வரத்து கால்வாயை தூர்வார மாநகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து பசுமை மன்றம் மற்றும் பல்வேறு அமைப்புகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து கண்மாயில் மியாவாக்கி காடுகள் உருவாக்கும் திட்டத்தில் பல ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.

பெரியகுளம் கண்மாயை பாதுகாக்க சமூக ஆர்வலர்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நகரின் மையப் பகுதியில் உள்ள இந்த கண்மாய் நிலத்தடி நீர் மட்டத்திற்கு ஆதாரமாக உள்ளது. இந்நிலையில் இந்த முறை வடகிழக்கு பருவ மழை சிவகாசி பகுதியில் சரிவர பெய்யவில்லை. நீர்வரத்து குறைவாக இருந்ததால் முழு கொள்ளளவு நிரம்பவில்லை.

இதன் பின்னர் கோடை வெயில் கடுமையாக இருந்ததால் கண்மாய் வேகமாக வற்ற தொடங்கியது. தற்போது நீர் முழுவதும் வற்றி வறண்டு காணப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. எனவே தென்மேற்கு பருவ மழை பெய்தால் மட்டுமே கண்மாய் நிரம்பும் வாய்ப்பு உள்ளது.





இராயபுரம் கிழக்குப் பகுதி 49 வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சஞ்சீவிராயன் கோவில் தெரு பாலு தெரு சந்திப்பில் 49–வது வட்டச் செயலாளர் க.கலைச்செல்வன் ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் படம் அலங்கரித்து மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் பொதுக்குழு உறுப்பினர் வே. சிவகுமார் பகுதி துணைச் செயலாளர்கள் பி.சேகர் கு.சுந்தர் மாவட்ட பிரதிநிதி எல்.சீனிவாசன்,ஏ.வேணுகோபால்,சி.லிங்கேசன்,வட்டக் கழக நிர்வாகிகள் எம்.பழனி, அ.குமார், ஜி.கோதண்டன், ஏ.கதிரவன்,வி. கலைச்செல்வன், ஆர்.பாரதிதாசன்,கே.பாரத்,எம்.கன்னியப்பன், ப.மோகனசுந்தரம்,தினேஷ்குமார்,கே.கிருபாகரன், எஸ்.சேதுராமன், ம.வெ.வேலு, சாம்சங், சின்னசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.